வருடாந்த செயல்திறன் அறிக்கை

2023

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு

கல்வி அமைச்சு

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு

செலவினத் தலைப்பு இல. – 126

உள்ளடக்கம்		பக்க இல.
அத்தியாயம் 01	நிறுவன சுயவிவரம்/ நிர்வாகச் சுருக்கம்	01
அத்தியாயம் 02	முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	06
அத்தியாயம் 03	2023 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை அத்தியாயம்	21
அத்தியாயம் 04	செயலாற்றுகை சுட்டிகள்	26
அத்தியாயம் 05	அடையக்கூடிய நிலையான வளர்ச்சி இலக்குகளின் செயல்திறன் (SDG)	27
அத்தியாயம் 06	மனித வளம் பற்றிய விபரக்குறிப்பு	30
அத்தியாயம் 07	இணக்க அறிக்கை	33

அத்தியாயம் 01

நிறுவன சுயவிவரம் / நிர்வாகச் சுருக்கம்

1.1 அறிமுகவுரை

சுகாதாரம், பொருளாதாரம், அரசியல் பிரச்சினைகளுக்கு மத்தியில் 2020 - 2022 காலப்பகுதியில் தொழிற்கல்வி வழங்குவதில் தெளிவான பின்னடைவு ஏற்பட்டதால், 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டு தொழிற்கல்வி நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டொன்றாகும். முன்னைய மூன்று ஆண்டுகளில் ஒன்றாக வந்த நெருக்கடியை எதிர்கொண்டு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்கியதன் பின்னர், கொடுப்பனவு நிலுவைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான அந்நிய செலாவணி மிகவும் கடுமையான நெருக்கடியாக வரும். இவ்வருடம் டிசெம்பர் மாதமளவில் அரசாங்கத்தையும், வெளிநாட்டு வருமானங்களைக் கருத்திற்கொண்டு, அடுத்த பிரதான பண ஓட்டம் ஏற்றுமதித் துறையிலிருந்து (அமெரிக்க டொலர் 11910 மில்லியன்) தவிர்ந்த வெளிநாட்டு வேலையாளர்களிடமிருந்து (அமெரிக்க டொலர் 5970 மில்லியன்) அனுப்புகின்ற பணமாகும். தற்போது, வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள சுமார் 3 மில்லியன் இலங்கையர்களில் 1 மில்லியன் பேர் நிரந்தர வதிவிடத்திற்காக சென்றுள்ளனர். அவர்களில் எஞ்சியுள்ளவர்கள் பல்வேறு நாடுகளில் வேலைக்காக சென்றுள்ளவர்கள். இந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரை 297,647 பேர் வெளிநாட்டு வேலைக்குச் சென்றுள்ளனர். (தற்காலிக தரவு) இவர்களில் எத்தனை பேர் தொழிற்கல்வியில் சான்றிதழ் பெற்றுள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. இந்தப் பின்னணியில், தொழிற்கல்வித் துறை மீது அதிகளவிலான தரப்புகள் கவனஞ் செலுத்தியுள்ளன.

ஆகையால், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஒருங்கிணைப்புடன் தொழில் வாய்ப்புகள் இனங்காணப்பட்டு வருவதுடன், கற்கை நெறிகள் நிறுவனங்களில் ஆரம்பிக்கப்பட்டு வருவதுடன், DTET மற்றும் VTA நிறுவனங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பை இலக்காகக் கொண்ட 12 தொழில்களின் கீழ் கற்றை நெறிகளுக்காக 3426 பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்துள்ளன. 'பிஸ்ஸா ஹட்'(Pizza Hut), 'புறஜேக்ட் புறோஸ்பேக்ட்' (Projects Prospects), 'அகசோநோபல் பேயின்ட் லங்கா' (Akozonobel Paint Lanka), கோஸ்வே பெயின்ட் லங்கா (Causeway Paints Lanka), ஜெனிவீவ் இண்டநஷனல் அக்கடமி (Genevieve International Academy), ரொயாட்டா லங்கா (Toyota Lanka) போன்ற தனியார் நிறுவனங்களுடன் (PPP வடிவில்) உடன்படிக்கை செய்துகொள்வதன் மூலமும், உள்நாட்டு கைத்தொழில்களின் வீழ்ச்சி காரணமாக தொழில்களில் ஏற்படும் இடைவெளியைத் தவிர்ப்பதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலமும் பயிலுநர் பயிற்சி மேலும் இலகுவாக்கப்பட்டுள்ளது. அதேபோன்று அரசாங்கத்தின் செலவுகளையும் குறைப்பதற்கும் நன்மையளித்துள்ளது. அத்துடன், திறனற்ற தொழிலாளர்களாக கைத்தொழில் துறையில் பிரவேசிப்பதில் உள்ள பாதகமான குறைபாடுளையும் மற்றும் தரநியமங்களையும், தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் கல்வி (NVQ) சான்றிதழைப் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டும் நோக்கில், இளைஞர்களையும், வேலையாளர்களையும் இலக்காகக்கொண்டு 'தெரண' திறன்கள் அணி (Derana Skills Force) , ஸ்கில்ஸ் எக்ஸ்போ (Skills Expo), எதிர்கால திறன்கள் (Future Skills) போன்ற அத்தகைய தொழிற்கல்வி ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் இந்த ஆண்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறாக, 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், கல்வி அமைச்சின் தொழிற்கல்வி மற்றும் திறன் அபிவிருத்திப் பிரிவின் கீழ் ஒன்பது தொழிற் பயிற்சி நிறுவனங்களில் 71,414 பயிலுநர்களுக்கு NIA சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 2023 டிசெம்பர் 31 இலுள்ளவாறு 1410 செயற்பாட்டிலுள்ள பயிற்சி நிறுவனங்கள் உள்ளன என்பதுடன், மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் 55 புதிய பாடவிதானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன்படி, தற்போதுள்ள பாடத்திட்டங்களின் எண்ணிக்கை 447 என்பதுடன்;, பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்படும் பாடத்திட்டங்களின் எண்ணிக்கை சுமார் 3000 ஆகும். இதன்படி, இந்த ஆண்டிற்கு சேர்ப்பதற்கு இலக்காக கொள்ளப்பட்டுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 122,254 உடன் ஒப்பிடும்போது, 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேர்க்;கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 120,255 ஆகும்.

இதேநேரம், கல்வித்துறையை சீர்திருத்துவதற்கான தேவைப்பாடுகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. தொழிற்கல்வியும் அதற்கு அமைவானது. இந்நிலையில், வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் தொழிற்கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 2.5 சதவீத ஒதுக்கீடுகள் வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றதா என்ற கேள்வி அரச செலவின மீளாய்வுக் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கேள்விக்குள்ளாக்க ப்பப்பட்டுள்ளது. அத்துடன், நிறுவன நிருவாகத்தில் மாற்றம், பொது தனியார் கூட்டாண்மை மற்றும் கற்கைநெறிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் முறை ஆகியவற்றை பரிந்துரைத்துள்ளது. தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை என்பன ஏற்கனவே கற்கைநெறி கட்டண முறைமையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், வருவாயை ஈட்டுவதனையும், நிலையான அபிவிருத்தியை நோக்கி நகர்வதனையும் இலகுவாக்குவதற்காக தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறைக்கு தேவையான பின்னணியை தயாரித்துக் கொண்டிருக்கின்றன.

ஆராய்ச்சி மற்றும் புத்துருவாக்கப் பிரிவானது 2023 ஆம் ஆண்டில் இப்பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளை பயனுறுதிவாய்ந்ததாகவும்இ வினைத்திறனுடையதாகவும் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, நாட்டில் நிலவும் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வுகாண்பதற்காக அதன் விடயப்பரப்பின் கீழுள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்டி, பல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. இவை, ஆராய்ச்சிகளைத் தெரிவு செய்தல், கண்காணித்தல் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றுக்கு முறையான செயன்முறையொன்றை உருவாக்குதல், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான படைப்பாற்றல்,

கண்டுபிடிப்புகள், புத்துருவாக்கங்கள் என்பவற்றின் முக்கியத்துவம் தொடர்பாக பாடசாலை சமூகத்திற்கும், பொதுமக்களுக்கும் அறிவூட்டுதல், விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்துவதை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், சர்வதேச ஆராய்ச்சி ஒத்துழைப்பு மற்றும் அறிவுப் பகிர்வு என்பவற்றை உள்ளடங்குகின்றன.

2023 நவம்பர் 7 முதல் 10 வரை கொழும்பு தேசிய இயற்கை விஞ்ஞான நூதனசாலையில் இலங்கை சமூகங்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்கில், விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னுரிமைப் பணியொன்றாக தேசிய விஞ்ஞான தினம் மற்றும் தேசிய விஞ்ஞான வாரத்தைக் கொண்டாடும் கண்காட்சி நடைபெற்றிருந்தது.

விஞ்ஞானத்தில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பில் இந்த ஆண்டு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இரு நாடுகளிலும் வர்த்தக கைத்தொழிலாக விளங்குகின்ற கரும்பு பயிர்ச்செய்கையில் எதிர்கொண்ட பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்காக இந்திய-இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் கீழ் மூலோபாய முறைமையொன்று வகுக்கப்பட்டது.

நாட்டில் நிலவும் மின்வலு நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கில் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் அமைச்சரவை அங்கீகாரத்துடன் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சூரியசக்தி தகடுகளின் முன்மாதிரி உற்பத்தி தொடர்பான கல்வி பயிற்சி திட்டம் 2023 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நிறைவடைந்தது. இலங்கை நிலைபெறுதகு மின்வலு அதிகாரசபை (SLSEA) மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA), ஆகியவற்றுடன் இணைந்து சூரிய தொழில்நுட்பவியலாளர்களுக்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட்டதுடன், இலங்கையில் தொழிற்கல்விக்கு புதுமையான துறையொன்றை அறிமுகப்படுத்தியதுடன், தேசிய தொழில் தகைமை (NVQ) நிலை 3 மற்றும் 4 ஆகிய இரண்டினதும் 84 தொழில்நுட்பவியலாளர்களைக் கொண்ட அணியொன்றுக்கு இதுவரை பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது பணி இலக்கான, சூரிய சக்தி மற்றும் அதன் பயன்பாடுகள் தொடர்பாக பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அறிவூட்டல், நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பாடசாலை மாணவர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அமைச்சினால் நடத்தப்பட்ட விஞ்ஞான கண்காட்சி என்பவற்றின் ஊடாக அடையப்பட்டது. சூரியத் தகடுகளின் முன்மாதிரி உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி என்பன கருத்திட்டத்தின் முன்னுரிமைப் பணியாக காணப்பட்டதன் விளைவாக 05 MPhil/PhD பட்டதாரிகள் உருவாவதனையும், வர்த்தக மயமாக்கலுக்கு பொருத்தமான 12 சூரியசக்தி தகடு முன்மாதிரிகள் ஆய்வுகூட மட்டத்தில் தயாரிக்கப்படுவதனையும் விளைவாக்கியுள்ளது.

சேதன உரங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மண் முகாமைத்துவத்தின் ஊடாக தரமிழந்த மண்ணை மேம்படுத்துவதன் கீழ் உயிரி மென்சவ்வு சேதன உரக் (BFBF) கருத்திட்டத்தின் முன்னோடித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைப்பதற்கு முடிந்திருந்தது.

அண்மையில் தாபிக்கப்பட்ட இலங்கை உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் உயிரியல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவையும் பரிசோதனைகளையும் அதிகரித்து, உள்நாட்டு நிதி மற்றும் வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்தி ஆய்வுகூட வசதிகளை விரிவுபடுத்தியுள்ளது. மேலும், தெற்காசியாவிற்கான பிராந்திய ஆராய்ச்சி நிலையமாக மாறுவதற்காக சர்வதேச மரபணு பொறியியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிலையத்துடன் (ICGEB) புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவகம், வருமானத்தை ஈட்டும் நோக்கில் நனோ தொழில்நுட்பம் மற்றும் உயர் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் வகையில் 2023 ஆம் ஆண்டில் அரச தனியார் கூட்டாண்மையின் கீழ் 05 புதிய ஆராய்ச்சிகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை கோள்மண்டலம் பொது மக்களுக்கு சேவைகளை வழங்குவதன் மூலம் 22 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை ஈட்டியுள்ளது.

1.2

நோக்கம்

உயர் திறனுடைய ஆராய்ச்சியினை சார்ந்த புத்தாக்க சமூகம்

செயற்பணி


அறிவாற்றலுடன் கூடிய ஒரு திறமை மிக்க சமுதாயத்தை உருவாக்குவதன் மூலமும் தொழில் திறன்கள் மற்றும் திறமைகள் அதுபோன்று தேசிய மட்டத்தில் புதுக் கண்டுபிடிப்புக்களுக்கு உகந்த சூழல் அமைப்பு என்பனவற்றின் மூலமும் பிராந்திய ரீதியில் ஒரு புதுக்கண்டுபிடிப்பு மையத்திற்கான அடித்தளத்தை உருவாக்கல்.

1.3. திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவின் செயற்பாடுகள்

- தொழிற்கல்வி தொடர்பில் ஆர்வத்தினை மேம்படுத்துவதற்கான உத்திகளை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்.
- கல்வித் தகுதிகளைப் புறக்கணித்து தொழிற்கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைக்கு ஏற்ற பணியாளர்களை உருவாக்கும் நோக்கத்திற்காக தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப கல்வியை நவீனமயமாக்குதல்.
- பாடத்திட்டங்களை நவீனப்படுத்தவும், "One TVET" கருது கோளின் கீழ் அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து, அவற்றை தொழில்நுட்ப பட்டம் வழங்கும் நிறுவனங்களாக மாற்றல்.
- பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னர் பல்கலைக்கழகக் கல்வியில் நுழைவதற்குத் தகைமை இல்லாத மாணவர்களுக்கு தொழிற்கல்விக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் வசதிகளை வழங்குதல்.
- தொழிற்பயிற்சிக்கான பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்துதல்.
- தேசிய தொழிற்கல்வித் தகைமை மட்டத்தை தற்போதைய 7 என்ற நிலையில் இருந்து 10 ஆக உயர்த்தி, இலங்கைத் தகுதிக் கட்டமைப்பை அதற்கேற்ப திருத்தல்.
- தொழில்முனைவு, தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகள் போன்ற பாடங்களை தொழிற்கல்வி படிப்புகளில் இணைப்பதற்கு ஏற்ற வகையில் தொழிற்பயிற்சி பாடத்திட்டங்களை திருத்துதல்.
- நடமாடும் தொழில்நுட்பக் கல்விச் சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை சந்தைகளை இலக்காகக் கொண்டு தொழில் கல்வியை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற கூடிய வகையில் ஆராய்ச்சி நிறுவனங்களை எளிதான முறையில் அமைத்தல்.
- கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சியின் விளைவுகளைப் பயன்படுத்த ஒரு திறமையான பொறிமுறையை உருவாக்குதல்.
- தேசிய கண்டுபிடிப்பு நிறுவனத்தை நிறுவ நடவடிக்கை எடுத்தல்.
- விஞ்ஞானம், தொழில்துறை, சமூக மற்றும் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்தல்.
- புதுக்கண்டு பிடிப்புக்களினை நோக்கி சமூகங்களை ஊக்குவித்து வழிநடத்தல்

1.4. அமைப்பாண்மை கட்டமைப்பு

அமைப்பாண்மை கட்டமைப்பு
கல்வி அமைச்சு
திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு



1.5. அமைச்சின் கீழ் அடங்கும் திணைக்களம்

- தொழினுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் (DTET)

1.6. அமைச்சின் கீழ் அடங்கும் நிறுவனங்கள்

- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு (TVEC)
- இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை (VTA)
- தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA)
- சிலோன் ஜேர்மன் தொழில்நுட்பவியல் பயிற்சி நிலையம் (CGTTI)
- தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (UNIVOTEC) மற்றும் பல்கலைக்கழக கல்லூரிகள்
- இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் (OUSL)
- வரையறுக்கப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலை (NSBM)
- தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் (NIBM)
- திறன்கள் அபிவிருத்தி நிதியம் (SDFL)
- நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகம் (ACCIMT)
- தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு (NASTEC)
- தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC)
- தேசிய புத்தாக்க முகவர் நிலையகம் (NIA)
- தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் (NIFS)
- தேசிய ஆராய்ச்சி மன்றம் (NRC)
- தேசிய விஞ்ஞான மன்றம் (NSF)
- இலங்கை உயிர் தொழில்நுட்ப நிறுவகம் (SLIBTEC)
- இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு (SLIC)
- இலங்கை நனோ தொழில் நுட்ப நிறுவகம் (SLINTEC)
- இலங்கை கோள்மண்டலம் (Planetarium)

1.7. வெளிநாடுகளால் நிதியீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

கருத்திட்டத்தின் பெயர்	நடைமுறையாக்கும் முகவர்	கருத்திட்டத்தின் மதிப்பீட்டு கிரய விலை – (மில்லியன்)	கருத்திட்ட கால வரையறை
உள்ளடக்கப்பட்ட பொருளாதார நிகழ்ச்சித்திட்டத்திற்கான திறன் (S4IG)	அவுஸ்திரேலிய அரசு	AUS $12	2022 மார்ச் 2025
GIZ-இலங்கை கருத்திட்டத்தில் தொழில் பயிற்சி GIZ- இலங்கை கருத்திட்டத்தில் தொழில் பயிற்சி கட்டம் - II	ஜெர்மன் அரசு	Euro 7 Euro 7	ஜூலை 2019- ஜூன் 2023 ஜூன் 2023 - 2026
USAID இலங்கையில் இளைஞர்தொழில்வாய்ப்பு மற்றும் வியாபார தொடக்கம் பற்றிய கருத்திட்டம் Youth (YouLead)	அமெரிக்க ஐக்கிய அரசு	USD 6	2021-2024
திறன் துறை அபிவிருத்தி திட்டம்	ADB/WB/GOSL	USD 398.41	2014- ஜூன் 2023
இலங்கையில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கான கல்லூரிகளில் கட்டுமானப் பாடநெறிகளுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம்	KOICA	USD 4	2020-2024
TVET தொழில் வழிகாட்டல் கருத்திட்டம்	KOICA	USD 6	2022-2026
நியகமவில் தொழிற்பயிற்சி நிலையத்தை வலுப்படுத்துதல்	HRD கொரியா	கொரியா வான் 2150	2023-2024

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1. 2022 ஆம் ஆண்டில் திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவின் சாதனைகள்

2.1.1. திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி துறை

➢ **பாதீடு முன்மொழிவுகள் அடிப்படையிலான திட்டங்களின் முன்னேற்றம் 2023**

பல்வேறு தொழில்களில் திறமையான இளைஞர்களுக்கு நிலவும் தேவைப்பாட்டினையும் பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்வதற்கு, முந்தைய ஆண்டுகளின் வரவு செலவு திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

- தொழிலாளர் சந்தையில் அதிக தேவை உள்ள கற்கைகளுக்கு மாணவர் உள்ளெடுப்பினை அதிகரிக்க தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அமைச்சு முடிவு செய்துள்ளது. எனவே, 2021 ஆம் ஆண்டில், வகுப்பறைகள், பட்டறைகள், ஆய்வகங்கள் மற்றும் உணவகங்கள், ஓய்வு அறைகள், உடை மாற்றும் அறைகள், சுகாதாரப் பிரிவுகள் மற்றும் மாணவர்கள் / ஆசிரியர் குடியிருப்புகள் ஆகியவற்றை மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில், 41.33 மில்லியன் ரூபாய். இலங்கையின் தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை மற்றும் இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் கீழ் 10 உப திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், திட்டத்தின் விலை ஏற்ற இறக்கங்கள் குறித்த கொள்முதல் குழு முடிவுகளின் தாமதத்தால் ரூ.2.85 மில்லியன் நிதி முன்னேற்றம் மட்டுமே எட்டப்பட்டது.

- இளைஞர் தலைமுறையை தொழில் பயிற்சிக்கு ஈர்க்கும் வகையில், "டெக் உதான திட்டத்தின்" கீழ், தனித்துவமான கட்டடக்கலை முறையின்படி, தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கான கல்லூரிகளை (CoTs) மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி 2021 ஆம் ஆண்டிலிருந்து கண்டி, குருநாகல், மருதானை ஆகிய இடங்களில் உள்ள தொழில்நுட்பத்திற்கான கல்லூரிகளிலும் மற்றும் ஹோமாகம, தம்புள்ளை, மாத்தறை ஆகிய இடங்களில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் புனரமைப்புச் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் மருதானை தொழில்நுட்பத்திற்கான கல்லூரி ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை இலங்கை கடற்படை செயல்படுத்துகிறது. 2023 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக ரூபாய் 300 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் 2023.12.31 ஆம் திகதி வரையிலுமான செலவினம் ரூபாய் 87.25 மில்லியன் ஆகும் என்பதுடன் ஒட்டுமொத்த பௌதீகவியல் முன்னேற்றம் 65% ஆகும்.

- திறன் மேம்பாடு, தொழிற்கல்வி பிரிவின் கீழ் இயங்கும் திறன் துறை மேம்பாட்டுத் திட்டமானது (SSDP) 2014 முதல் 2018 வரை இலங்கையின் தேசிய பயிலுநர்கள் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 11 தொழிற்பயிற்சி நிலையங்களின் தரை தளங்களை நிர்மாணிப்பதற்கு நிதியளித்துள்ளதுடன் இக்கட்டுமானப்பணியில் 50% மான பணி பூரணமாகியுள்ளது. இந்தக் கட்டிடங்களுக்கு நேரடி சூரிய ஒளி மற்றும் மழையால் ஏற்படும் சேதத்தைத் தடுக்கவும், கீழ் தளத்தில் பயிற்சி பெறும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் இந்தக் நிர்மாணப்பணி பூரணப்படுத்தப்படல் வேண்டும். அதன்படி,தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் நான்கு கட்டிடங்களினதும் மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் ஏழு கட்டிடங்களினதும் மேல்தளங்களினை நிர்மாணிப்பதற்கான பணிகளினை நிறைவு செய்ய (மீதமுள்ள 50% வேலை) ரூபாய் 870 மில்லியன் தேவைப்படுகிறது. 2023 - 2025 காலகட்டத்தில், இந்த கட்டிடங்கள் அனைத்தையும் பல கட்டங்களாக முடிக்க திட்டமிடப்பட்ட போதிலும் பெறப்பட்ட ஒதுக்கீடு அளவு, கட்டுமானத் துறையின் தற்போதைய நிலைமை மற்றும் நிதியைப் பெறும் திறன் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, தேசிய செயல்பாட்டு மையத்தால் (NOR), செய்யப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், 6 கட்டிடங்களுக்கு மட்டும் பாதுகாப்பு கூரைகள் அமைக்க தேவையான நடவடிக்கைகள் வகுக்கப்படுகின்றன.

2.1.2. 2023 இல் தொழில்நுட்பம், தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையின் சாதனைகள்

- இலங்கையில் உள்ள இளைஞர் சமூகத்தின் தற்போதைய வேலைத் தேவை மற்றும் உலகளாவிய தொழிலாளர் சந்தைப் போக்குகள் குறித்து கவனம் செலுத்துவதற்கு, வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் தேவைகளுக்கு இணங்க மற்ற அமைச்சுகள் மற்றும் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் திட்டங்களை ஒருங்கிணைப்பது அவசியமாகும். அத்துடன், பற்பல அணுகலை வழங்கும் தொழில் பயிற்சி நிறுவனங்களை வழிநடத்துவதும் அவசியமாகும். இதன்படி, வெளிநாட்டு தொழிலாளர் சந்தைக்கு திறமையான பணியாளர்களை வழங்குவதற்காக, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வெளியுறவு, பொது நிர்வாகம் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவை உள்ளிட்ட அமைச்சுகளுக்கு இடையேயான ஒருங்கிணைந்த செயல் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உள்ளூர் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்க மற்ற நாடுகளின் தொழிலாளர் கோரிக்கைகளுடன் தேசிய திறன் தரநிலைகளை (NCS) சீரமைப்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. இதில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) கையெழுத்திடுதல் மற்றும் தற்போதைய உலகளாவிய தொழிலாளர் சந்தைப் போக்குகள், குறிப்பாக அதிக தேவை உள்ள துறைகளில் செயற்படும் தொழில் பயிற்சி நிறுவனங்களுடன் தகவல்களைப் பகிர்தல் ஆகியவை அடங்கும். மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் நாட்டிலுள்ள தூதரகங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை பயனுள்ள ஒருங்கிணைப்புக்கு மேம்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி ஜப்பான் அரசாங்கத்திற்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவுற, ஜப்பான் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட "குறிப்பிட்ட திறன்மிக்க தொழிலாளர் திட்டத்தை" இலக்காகக் கொண்டு, ஜப்பானிய மொழிப் பாடநெறிகள் மற்றும் தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் என்பன தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் நடத்தப்படுகின்றன. அந்தப் பாடநெறிகளை வெற்றிகரமாக முடித்த பயிற்சியாளர்களின் தகவல்கள், எதிர்கால நடவடிக்கைகளுக்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- VTASL இன் கீழ் 17 கற்கைகளில் 1,504 பயிற்சியாளர்களுக்கும், மேலும் 6 கற்கைகள் தொடர்பில் NAITA இனை சார்ந்த 191 பயிற்சியாளர்களுக்கும் மற்றும் DTET இனை சார்ந்த 3,860 பயிற்சியாளர்களுக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை இலக்காகக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

- வெளிநாடுகளில் வேலை சார்ந்த திட்டங்களுக்கு பயிற்சியாளர்களை அனுபுவதற்கு தொழில் பயிற்சி நிறுவனங்களினை நெறிப்படுத்துதல். உதாரணமாக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஆதரவுடன் சிங்கப்பூரின் கட்டுமானத் துறையில் NVQ தகைமைகளினை வைத்திருக்கும் இலங்கையருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கல், கொரியாவில் ஒரு வேலைத்திட்டத்தின் மூலம் கப்பல் கட்டுமானத் துறையில் இலங்கையர்களுக்கான வேலை வாய்ப்புகளை வழங்கல், விருந்தோம்பல் துறையில் பஹரெனில் இலங்கைப் பயிலுனர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கல் மற்றும் இலங்கை தாதியர் மற்றும் வைத்தியத்துறையினை சார்ந்தவர்களுக்கு பெல்ஜியம் நாட்டில் பணியாற்றுவதற்கான வேலைத்திட்டம்.

- கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் துறை திணைக்களமானது , தெரண ஓயாக வலையமைப்புடன் இணைந்து பள்ளிக் கல்வியை முடித்த இளைஞர் சமுதாயத்தை தொழிற்கல்விக்காக வழிநடத்தி அவர்களை உயர்த்துவதற்காக "திறன் படை மாணவர் வழிகாட்டல் திட்டத்தைத்" தொடங்கியது. மருதானை, கம்பஹா, எம்பிலிப்பிட்டிய, காலி, நுவரெலியா, குருநாகல், களுத்துறை தொழில்நுட்ப மற்றும் தொழிநுட்பக் கல்லூரிகளில் 16,740 மாணவர்களின் பங்களிப்புடன் இதுவரை அதன் 7 நிலைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதுடன், 8,280 மாணவர்கள் தொழில்முறை வழிகாட்டல் பெறுவதற்கான தொழில்சார் விசைப்பரீட்சையில் பங்குபற்றியுள்ளனர்.மேலும், மாணவர்களை தொழிற்பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்பவும், RPL அமைப்பின் கீழ் NVQ பெறுவதை பிராந்திய வாரியாக ஊக்குவிக்கவும், மற்றும் அதற்காக நபர்களை ஈர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- பொது வணிக முயற்சிகள் ஆணைக்குழு குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க, தொழிற்கல்வி துறையின் புதிய போக்குகளுக்கு தீர்வு காண்பதற்காக, 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் எண் 20ஐ திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தேசியக் கல்விக் கொள்கைக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதால், தேசியக் கல்விக் கொள்கைக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய திறன்கள் ஆணைக்குழுவை அமைப்பதற்காக தயாரிக்கப்பட்ட வரைவானது

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளருக்கு, 2023.12.28 கடிதத்தின் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், பொது வணிகக் குழுவின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, 1995 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு, தேசியக் கல்விச் சீர்திருத்தம் மற்றும் 2024 வரவு செலவுத் திட்டத்தைக் கருத்தில் கொண்டு, தேவையான மேலதிக பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இளைஞர் சமூகத்தினருக்கு தொழிற்பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் தொழிற்பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களுக்கான "நிபுணதா சிசு சவிய" உதவித் திட்டத்தின் கீழ் 2023 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் 24,812 மாணவர்களுக்கு 385.8 மில்லியன் தொழில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

- கிளிநொச்சியில் உள்ள இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்திற்கு (SLGTI) பொருத்தமான சட்ட கட்டமைப்பை தயாரிக்கும் நடவடிக்கையின் முன்மொழிவை பரிசீலித்த பின்னர், SLGTI ஐ CGTTI இன் கீழ் ஒரு பிராந்திய கிளையாக பேணுவதற்கு 2023.01.31 திகதியில் 31.01.2023 அமைச்சரவை தீர்மானம் பெறப்பட்டுள்ளது. அதன்படி, GIZ திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தை 2022 ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மேலும், கிளிநொச்சியில் உள்ள இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் (SLGTI) தொடர்பாக எதிர்பார்க்கப்படும் கல்வி மற்றும் நிர்வாக நோக்கங்களை முறையாகவும் வினைத்திறனாகவும் பேணுவதற்காக இலங்கையில் GIZ தொழிற்பயிற்சி திட்டத்தின் கீழ் ஜேர்மன் நிபுணர் ஒருவரின் உதவியைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

- ஜெர்மன் கூட்டாட்சி குடியரசின் 7.6 மில்லியன் யூரோ மானியத்தின் கீழ் GIZ - VTSL திட்டமானது 2019 ஆம் ஆண்டு முதல் GIZ நிறுவகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு 368 மாணவர்களுக்கு தொழில்துறை ஒத்துழைப்பு அணுகுமுறையில் பயிற்சி அளித்துள்ளது. மேலும், திறமையான தொழிலாளர் திட்டங்களுக்கு 18 தனியார் துறை கைத்தொழில்களின் ஆதரவும், சிறப்புத் தேவைகள் உள்ளவர்கள் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய மக்களுக்கான 40 தகுதி நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. தொழிற்பயிற்சி நிலையங்களின் 516 உத்தியோகத்தர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் இந்தத் திட்டம் 2023 மே மாதத்தில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஜெர்மன் கூட்டாட்சி குடியரசின் 7 மில்லியன் யூரோ மானியத்தின் கீழ் VTSL இனது இரண்டாம் கட்ட புதிய திட்டத்தை செயல்படுத்த முன்மொழியப்பட்டதுடன் இது தொடர்பிலான வரைவு அமுலாக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2023.12.14 திகதியினை கொண்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவையின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

- உள்ளடங்கிய வளர்ச்சிக்கான திறன்கள் திட்டத்தின் (S4IG) இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாக, ஆஸ்திரேலியா அரசாங்கம் நாடளாவிய ரீதியில் தொழில் பயிற்சித் திட்டங்களுக்கு $12 மில்லியன் நிதியை வழங்கியுள்ளது. இந்த திட்டங்கள் சுற்றுலாவை மேம்படுத்துவதையும், பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் சிறப்புத் தேவைகளை ஆதரிப்பதில் கவனம் செலுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. VTA, NAITA மற்றும் TVEC ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

- பட்டறைகளில் இருக்கும் பயிற்சியாளர்களுக்கு அதற்கான ஆடைகளினை(overall kits)வழங்கும் திட்டத்தின் கீழ், OCUSL, VTASL, NAITA, DTET, CGTTI, UNIVOTEC மற்றும் அதனோடிணைந்த பல்கலைக்கழகங்களில் பயிற்சி பெறும் 11,902 பயிற்சியாளர்களுக்கு அதற்கான ஆடைகளினை தைப்பதற்கான பணியானது இலங்கை இராணுவத்தின் "ரணவிரு ஆடை" நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட பணியின் படி தயாரிக்கப்பட்ட 4,702 ஆடைகளாவன 2023.12.31 அன்று தொழில் பயிற்சி மையங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. ரணவிரு ஆடை நிறுவனம் 2024 ஜனவரியில் மீதமுள்ள ஆடைகளை வழங்கியதுடன், தற்போது தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு உரிய ஆடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- இலங்கையின் தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் இயங்கும் நியகமவில் உள்ள தேசிய தொழிற்பயிற்சி நிலையம் கொரிய குடியரசின் வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சின் நிதி உதவியுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் சந்தையின் கோரிக்கைகளுக்கு ஏற்ப தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையை வலுப்படுத்த இது செய்யப்பட்டது. மையத்தின் திறனை உருவாக்க கொரிய வான் 2.15 பில்லியனை வழங்க கொரிய குடியரசு ஒப்புக்கொண்டது. முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும், TVET துறையில் நிபுணர்கள் மற்றும் பயிற்றுனர்களுக்கு பயிற்சி அளிக்கவும், உபகரணங்களை வழங்குவதன் மூலம் திறனை மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- இலங்கையில் K–Tec தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தின் தற்போதைய வசதிகளை மேலும் மேம்படுத்தும் வகையில், இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை கருத்தில் கொண்டு EXIM வங்கி 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. நிறைவுக்கு பிந்தைய ஆதரவிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வரைவானது, இலங்கை கொரிய தேசிய பயிற்சி நிறுவனத்திற்கு (K-Tec) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வெளிவிவகாரத் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகள் உரிய வரைவுக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அனுமதி கோரி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- கட்டுமானப் படிப்புகளை வழங்குவதற்கான தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கான கல்லூரிகளின் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டத்திற்கு KOICA $4 மில்லியனை வழங்கியுள்ளது. கட்டுமானத் துறையில் தொழிலாளர் சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உயர்தர தொழிற்கல்வி மற்றும் பயிற்சியை வழங்குவதே திட்டத்தின் குறிக்கோள், என்பதுடன் இறுதியில் வேலை வாய்ப்புகளுக்கும் இது வழிவகுக்கும். கைத்தொழில் தேவையை பூர்த்தி செய்வதற்காக, மருதானை மற்றும் இரத்தினபுரியில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், இரத்மலானை மற்றும் மாத்தறையில் அமைந்துள்ள தொழில்நுட்பத்திற்கான கல்லூரிகளிலும் நிர்மாண பாடநெறிகளின் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சி, இயந்திரங்களின் வகைகள், பட்டறைகள் மற்றும் படிப்புகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு வழிகளில் இது அடையப்பட்டது.

- மில்லியன் அமெரிக்க டாலர்கள் நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட "TVET தொழில் வழிகாட்டல் தளம்" திட்டமானது, TVET துறையில் மாணவர்களின் வேலைவாய்ப்பு திறன்களை மேம்படுத்துவதற்கும் தொழிலாளர் சந்தையில் வேலைகளில் அவர்களை வழிநடத்தப்படலினையும் நோக்கமாக கொண்டு செயல்படுகிறது. இதன்படி, தொழிற்பயிற்சி வழங்கும் நிறுவனங்களை அவதானித்து இத்திட்டத்தின் முதற்கட்டமாக 70 நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டன. மேலும், இத்திட்டத்தின் பிரதான திட்டம் தயாரிக்கும் பணி முடிந்து, மென்பொருள் உருவாக்கம் தொடங்கியுள்ளது.

- YOULEAD திட்டத்தின் கீழ் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு அதன் மூலம் 39,683 பெறுநர்கள் பயனடைந்தனர். 517 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டன. தொழில் முனைவோர் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் 1,680 நபர்களுக்கு தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு திட்டங்கள் நடத்தப்பட்டன.

- 2023.01.16 ஆம் திகதியன்று "EDFC இன் கீழ் கல்வி மற்றும் ஆராய்ச்சி திறனை மேம்படுத்தும் நோக்கத்திற்காக சலுகைக் கடன் வசதிகளைப் பெறுவதற்கான திட்டத்திற்கு" அமைச்சர்கள் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. கொரிய மானியங்களின் உதவியுடன் சமுத்திர பல்கலைக்கழகத்தில் முழு வசதியுடன் கூடிய பல்கலைக்கழக வளாகத்தை நிர்மாணிப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இருப்பினும், அதன் செயல்படுத்தல் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கடன் வசதிகளைப் பொறுத்து இருக்கும்.

- SEPI கடன் திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டில் 45 பெறுநர்களுக்கு ரூபாய் 33.1 மில்லியன் கடன் வழங்கப்பட்டுள்ளது.

- பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள திறன் அபிவிருத்தி உதவியாளர்கள் 25 மாவட்டங்களை உள்ளடக்கிய தொழிற்பயிற்சி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பாடசாலை வாழ்க்கை வழிகாட்டல் முயற்சிகளின் ஒரு அங்கமாக நடாத்தினர்.

சுட்டிலக்கம்	தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்	நடத்தப்பட்ட நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை
1	க.பொ. த.சாதாரண தர மாணவர்களுக்கு	1,132	63,576
2	க.பொ. த. உயர்தர தர மாணவர்களுக்கு	531	19,751
3	பெற்றோர்களுக்கான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம்	1,643	60,478

	அரசாங்க அதிகாரிகளுக்கு (அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்புரி அதிகாரிகள் போன்றவர்கள்) போதிப்பதற்கு ஏற்ப பல திட்டங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.	1,025	26,863
5	பாடசாலை கல்வியினை முடித்து விட்டு விலகிய மாணவர்கள்	1,596	40,031
6	RPLக்கு பரிந்துரை		6877
7	மற்ற நிறுவனங்களால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வுகள்	3	408
8	தொலைபேசியின்மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகள்		619
9	அலுவலகத்திற்கு விஜயம் செய்து சேவையினை பெற்றுக்கொள்ளல்		459
	மொத்தம்	**5,930**	**219,062**

- நாடளாவிய ரீதியில் சேவை தேடுபவர்களுக்கு தொழில் வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது மற்றும் மொத்தம் 466 நபர்கள் சேவையைப் பெற்றுள்ளனர். (பொது தொலைபேசி மற்றும் உடனடி தொடர்பு எண் மூலம்.)
- தேசிய தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை மையம் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசு அதிகாரிகள், தனியார் துறை உரிமையாளர்கள் , ஓய்வு பெற்றவர்கள் மற்றும் மதகுருமார்கள் உட்பட பல்வேறு குழுக்களுக்கு தொழில் வழிகாட்டுதல் அமர்வுகளை வழங்குகிறது. இதற்கு மேலதிகமாக, பிரதேச செயலாளர் அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் வழிகாட்டல் சேவைகளை வழங்குகின்றனர்.
- க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த.உயர்தர மாணவர்களின் பெற்றோர்களுக்கும் மற்றும் அரச அலுவலர்களுக்கும் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் 04 பொது விளக்க உரைகளினை தயாரித்தல் .அத்துடன் செவிப்புல மற்றும் கட்புல நாடாக்களினையும் தயாரித்தல் .

- திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை ஜேர்மன் கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தின் மாணவர் விடுதியின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்ததுடன் கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை ஜேர்மன் கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தின் மாணவர் விடுதி கட்டிடத்தின் முதற் கட்ட கட்டுமானப் பணிகளும் முடிவடைந்துள்ளன.

- திறன் துறை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட வேலை தொடர்பான பயிற்சித் திட்டத்தின் முதன்மை நோக்கம், புதிய வேலை வாய்ப்புகளுக்கான பொருத்தமான திறன்களை வளர்ப்பதற்கு ஆதரவளிப்பதாகும். இது தனியார் மற்றும் பொதுத்துறை பயிற்சி நிறுவனங்களில் தொழில் பயிற்சி வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்காக நிதி மற்றும் வசதிகளை வழங்குகிறது மற்றும் அதிக தேவைப்பாடு உள்ள தொழில் துறைகளில் வேலை வாய்ப்புக்கு தேவையான கற்கைகளில் வேலை தேடுபவர்களுக்கு பயிற்சி அளிக்கிறது. இந்த வேலை தொடர்பான பயிற்சித் திட்டம் 2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கடந்த 5 ஆண்டுகளில் 5 சுற்றுகள் செயல்படுத்தப்பட்டு வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் பயிற்சி நிறுவனங்களுடன் 104 பயிற்சி ஒப்பந்தங்கள் SSDP யினால் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் 8426 பயிற்சியாளர்கள் வெற்றிகரமாக பயிற்சியை முடித்துள்ளனர்.

- தனியார் துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் திறன்களை மேம்படுத்தவும் திறன் இடைவெளிகளைக் குறைக்கவும் திறன் பிரிவுகளுடன் பகுதி நேர மற்றும் வார இறுதி நெகிழ்வான பயிற்சி வகுப்புகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் கற்கைகள் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தின் தேசிய தொழிற்கல்வித் தகுதி நிபுணத்துவப் பிரிவினால் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தப் கற்கைகளினை நடத்துவதற்கான பாடச் செலவில் 50% திறன் துறை மேம்பாட்டுத் திட்டம் ஏற்கிறது. இதன் கீழ் 3030 பயிற்சியாளர்கள் வெற்றிகரமாக பயிற்சியை முடித்துள்ளனர்.

- பயிற்சித் திட்டங்களின் பொருத்தத்தை மேம்படுத்த கட்டுமானம், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம், உற்பத்தி அத்துடன் சுற்றுலா ஆகியவற்றில் நான்கு முன்னணி தொழில் துறை திறன் மன்றங்கள் (ISSCs) உருவாக்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டில், விவசாயத் துறைக்காக

விவசாயத் துறை திறன் மன்றம் மற்றும் ஆட்டோமொபைல் தொழில் துறைக்காக ஆட்டோமொபைல் தொழில் துறை திறன் மன்றம் நிறுவப்பட்டது.

- திறன் துறை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தொழில் துறை திறன் மன்றம் ஆகியன 2023 ஆம் ஆண்டில் தொழில்துறையில் உள்ள திறன்கள், திறமைகள் மற்றும் வாய்ப்புகளை முன்னிலைப்படுத்த முதல் Skills EXPO கண்காட்சியினை வெற்றிகரமாக ஏற்பாடு செய்தன. இது தேசிய அளவிலான மாநாடு மற்றும் கண்காட்சியாகும், இது திறன்கள், திறமைகள் மற்றும் வேலை வாய்ப்புகள் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச பங்குதாரர்களை ஒரு மேடையில் வெற்றிகரமாக ஒன்றிணைத்தது. இந்நிகழ்வில் அதிமேதகு சனாதிபதியுடன் பல தூதர்கள், நன்கொடையாளர் முகவர் நிறுவனங்களின் நாட்டு பணிப்பாளர் அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் தொழில் பங்குதாரர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

- நாடளாவிய ரீதியில் 32 தொழிற்பயிற்சி நிலையங்களில் திறமை மிகு வகுப்பறை திட்டத்தை (Smart Class Room) நடைமுறைப்படுத்துவது இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி, இணைய வழி மூலமான கல்விக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படுவதுடன், பாடத்திட்ட உள்ளடக்கங்களை உருவாக்குதல் மற்றும் மாணவர்களை இணையத்துடன் இணைப்பது தொடர்பான கற்றல் சார்ந்த முகாமைத்துவ அமைப்புக்கள் (LMS) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பு தலைமை அலுவலகம், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு, மற்றும் அமைச்சகம் ஆகியவை கண்காணிப்பினை மேற்கொள்வதற்கு உதவுகிறது.

- மானியத் திட்டத்தின் வெளியீடுகளில் ஒன்று, TVET துறையில் உள்ள தொழில்முனைவோரை அவர்கள் தேர்ந்தெடுத்த துறையில் தொழில் தொடங்க ஊக்குவிப்பதாகும். எதிர்காலத் திறன்கள் கருத்தரங்கம் மற்றும் விருது வழங்கும் விழாவில் விருது பெற்றவர்கள் மேலும் ஆதரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டனர். திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த நடுவர் குழு மானியம் பெற்றவர்களில் இருந்து சிறந்த தொழில்முனைவோரைத் தேர்ந்தெடுத்தது. தெரிவுசெய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு நாடளாவிய ரீதியில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்களை சந்திக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன் புதிய அறிவையும் அனுபவத்தையும் பரிமாறிக் கொள்ள முடிந்தது.

- ஆசிய அபிவிருத்தி வங்கி, திறன் துறை மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து, 2024-2033 க்கு இடையில் துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு வழிகாட்டும் நோக்கில் தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறைக்கான ஒரு மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. மேலதிக கலந்துரையாடலுக்காக ஜனாதிபதி செயலகத்தில் உள்ள தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி மறுசீரமைப்பு குழுவிடம் இந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.1.2. ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க துறை

விஞ்ஞானவியல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் வளர்ச்சி

- **விஞ்ஞான தொழில்நுட்ப பிரபல்யப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டங்கள்**

இந்த அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவுகளின் முக்கியப் பொறுப்புகளில் ஒன்று இலங்கைப் பிரஜைகள் மத்தியில், குறிப்பாக பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடையே விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தி அவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்துவதாகும். மேற்கூறிய பணிகளை அடைவதற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு

- **தேசிய விஞ்ஞான தினம்**

– தேசிய விஞ்ஞான தினக் கண்காட்சி நவம்பர் 8, 9 மற்றும் 10 ஆகிய திகதிகளில் தேசிய இயற்கை விஞ்ஞானம் அருங்காட்சியகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த தேசிய விஞ்ஞானம் கண்காட்சிக்கான கருப்பொருள் "விஞ்ஞானத்திற்கு வலுவூட்டுவதன் மூலம் சுபீட்சத்தினை காணுதல்" என்பதாகும். இந்த நிகழ்வு பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தத் துறையில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதன் மூலம் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஈடுபட மாணவர்களை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும். கண்காட்சி ஒன்பது முக்கிய கருப்பொருள்களை

உள்ளடக்கியது மற்றும் எதிர்காலத்தில் கட்டப்பட உத்தேசிக்கப்பட்ட தேசிய அறிவியல் மையத்தை மீண்டும் உருவாக்குவதற்கான ஒரு பார்வையும் இதன் போது இருந்தது.

கண்காட்சியின் மூன்று நாட்களிலும், விஞ்ஞானத்தின் சமீபத்திய போக்குகள் மற்றும் அதன் விளைவாக புதிய வேலை வாய்ப்புகள் மற்றும் அன்றாட வாழ்வில் விஞ்ஞானத்தின் பயன்பாடுகள் குறித்து விவாதிக்க பல்வேறு அறிஞர்களின் விரிவுரைகள் நடத்தப்பட்டன. கண்காட்சியை ஏராளமான பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டனர். இதன் நிறைவு விழா நவம்பர் 10ஆம் திகதி இடம் பெற்றதுடன் இதில் கல்வி அமைச்சரும் கலந்துகொண்டார்.

- **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தினை பிரபல்யப்படுத்துவதற்கு தேவையான கல்வி நடவடிக்கைகளினை ஒழுங்கமைப்பு செய்தல்**

- **மின் செய்தி வலைத்தளத்திற்கு கட்டுரை போட்டிகளினை ஒழுங்கமைப்பு செய்தலும் பதிவேற்றம் செய்தலும்**
  இது நவீன விஞ்ஞான அறிவு மற்றும் இலங்கை ஆராய்ச்சியாளர்களால் நடைபெற்று வரும் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் பற்றிய தகவல்களை பாடசாலை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வித்யா இ-செய்தியின் வெளியீடு, மும்மொழி மாதாந்த செய்தித்தாள் ஆகியவற்றின் ஊடாக பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- லேக் ஹவுஸ் நிறுவனத்துடன் இணைந்து, தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளின் மாதாந்த இணைப்பாக வித்யா இ-நியூஸ் மும்மொழிப் பத்திரிகை இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது.. தேசிய விஞ்ஞான தின கொண்டாட்டங்கள் மற்றும் அதன் ஓராண்டு நிறைவை முன்னிட்டு, ஒரு மொழியில் மொத்தம் 53 அறிவியல் கட்டுரைகள் வெளியிடப்பட்டு, நவம்பர் இதழ் சிறப்பு இதழாக அச்சிடப்பட்ட வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து வித்யா மின்னஞ்சலுக்கு கட்டுரைகளை வழங்கி, நாளிதழின் உருவாக்கத்திற்கு பங்களித்தவர்களுக்கு பாராட்டுதல்கள் தெரிவிக்கப்பட்டது.

- **விஞ்ஞான அறிவினை பகிர்வதற்கு வேறுப்பட்ட கண்காட்சிகள் மற்றும் வேறுபட்ட ஊடக அடிப்படையிலான நிகழ்ச்சிதிட்டங்களினை ஒழுங்கு படுத்தல்**

- பொதுமக்களிடையே அறிவியல் கல்வியை மேம்படுத்துவதற்காக "வித்யா" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி உருவாக்கப்பட்டது. இது பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது, வானியல் மற்றும் நனோ தொழில்நுட்பம் போன்ற பல்வேறு அறிவியல் தலைப்புகளை உள்ளடக்கியது. பார்வையாளர்களுக்கு நவீன விஞ்ஞானவியல் கருத்துக்களுக்கு அடிப்படை அறிமுகத்தை வழங்குவதே இந்த நிகழ்ச்சியின் நோக்கம்.

➢ **இருதரப்பு மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப கூட்டிணைவு**

- **இந்திய - இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு**

இந்திய-இலங்கை கூட்டு ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் 2019 இல் கைச்சாத்திடப்பட்ட ஒத்துழைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எமது அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே அறிவியல் அறிவு பரிமாற்றத்தை எளிதாக்குவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2019 இல், 8 ஆராய்ச்சி திட்டங்களுக்கும் 1 பட்டறைக்கும் நிதியளிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில், நிபுணர் குழுவின் உதவியுடன் இரண்டு ஆறு மாத மதிப்பாய்வுகளை நடத்தப்பட்டன. அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், திட்டங்களை மேலும் திறம்பட தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இலங்கை மற்றும் இந்தியாவில் உள்ள கரும்புச் செடிகளின் இலைகளை பாதிக்கும் வெள்ளைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறையை உருவாக்குவதற்கான செயலமர்வு பெலவத்தையில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்றது. இரு நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் பயிலரங்கில் கலந்து

கொண்டனர், மேலும் அவர்கள் தற்போது இந்த திட்டத்தை தொழிலதிபர்களுக்கு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

- **இலங்கை நிகழ்ச்சித்திட்டத்திற்கானஇந்திய விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி இணையுரிமைகள் (ISRF)**

– இந்த திட்டத்தின் நோக்கம், அண்டை நாடுகளான ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், மாலத்தீவு, மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு இந்தியாவில் உள்ள முதன்மையான ஆராய்ச்சி ஆய்வகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் மருத்துவம் மற்றும் பொறியியல் உட்பட அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அனைத்து முக்கிய துறைகளிலும் சமகால ஆராய்ச்சிப் பகுதிகளில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதாகும். 2022/2023 ஆம் ஆண்டில் இல் ISRF திட்டத்திற்கான அழைப்புவிடுக்கப்பட்டதோடு 11 விண்ணப்பதாரர்களில் 10 இணையுரிமைகள் வழங்கப்பட்டன.

- **ஏற்கனவே கையெழுத்திட்டு தொடங்கப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள்**

விஞ்ஞானம்,தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகளில் புரிந்துணர்வு உடன்படிக்கையானது நேபாள்மற்றும் இலங்கைக்கு இடையே 2023.12.21 ஆம் திகதியன்று கைச்சாத்திட்டப்பட்டது.

இதற்கமைவுற , நடைமுறைபடுத்துகை மட்டத்தில் 11 நாடுகளுடன் 13 உடன்படிக்கைகள் கைசாதிட்டப்பட்டன.

➢ **ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கு ஆதரவு வழங்கல்**

தேசியத் தேவையாகக் கருதப்படும் தேசிய ஆராய்ச்சி முகாமைத்துவ தகவல் அமைப்பை நிறுவுவதற்கான திட்டத்தினை, தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் மூலம் செயல்படுத்துவதற்குத் தேவையான அனுமதியைப் பெற தேசிய திட்டமிடல் துறைக்கு அனுப்பப்பட்டது. இந்த அமைப்பு, நாட்டிற்குள் நடத்தப்படும் அனைத்து ஆராய்ச்சிகளின் முறையான தரவைப் பெறுவதையும், பெறப்பட்ட தரவுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதையும், அத்தகைய ஆராய்ச்சியை எளிதாக்குவதையும், சந்தையை உருவாக்குவதையும் நிர்வகிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கூடிய ஆராய்ச்சி பற்றிய தகவல்களைச் சேகரிக்கும். இந்த அமைப்பில் அனைத்து பொது ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பதிவு செய்யப்பட எதிர்பார்க்கப்படுகிறது மற்றும் இந்த தகவல் அமைப்பின் மூலம் ஆராய்ச்சி மானியங்களுக்கு விண்ணப்பிக்க முன்மொழியப்பட்டுள்ளது. இந்த முறையைப் பயன்படுத்துவதன் மூலம், ஆராய்ச்சி மானியங்களுக்குத் தகுதியான ஆராய்ச்சியின் தேர்வு மற்றும் மதிப்பீட்டு செயல்முறை வெளிப்படைத்தன்மையுடன் முறையாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதோடு, ஆராய்ச்சியின் நகல்களைத் தவிர்க்கவும் அமைச்சு எதிர்பார்க்கிறது. தற்போது, இந்த தகவல் அமைப்பின் மூலவகை மாதிரியின் உருவாக்கம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- **2/2014 எனும் இலக்கத்தினை கொண்ட முகாமைத்துவ சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைவுற ஆராய்ச்சி படிகளினை வழங்குவதற்கு ஆராய்ச்சிகளினை மீள் நோக்கல்**

02/2014 எனும் இலக்கத்தினை கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சி கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பாக ஆராய்ச்சி முகாமைத்துவக் குழு மற்றும் ஆராய்ச்சி கண்காணிப்புக் குழுவைக் கூட்டுவதன் மூலம் ஆராய்ச்சி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல் ஆகியவை சம்பந்தப்பட்ட அமைச்சின் பொறுப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி, 2014 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் திருத்தம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் பங்கேற்புடன் கலந்துரையாடல் நடைபெற்றது. இது தவிர, இந்த அமைச்சின் கீழ் இயங்கும் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவானது, இந்த நோக்கத்திற்காக 2023 ஆம் ஆண்டில் 24 ஆய்வுத் திட்டங்களை மதிப்பீடு செய்ததுடன், 03 ஆய்வுக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

- **அமைச்சின் நோக்கெல்லையின்கீழ் ஆராய்ச்சி நிறுவகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆராய்சிகளினை கண்காணித்தலும் மதிப்பிடலும்**

  இந்த அமைச்சின் கீழ் இயங்கும் SLINTEC ஆல் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, விவசாயம், உணவு விஞ்ஞானம் மற்றும் மருந்துகள் ஆகிய துறைகளில் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகளை மதிப்பிடுவதற்கான முறையான வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. மேற்படி திட்டங்களின் மதிப்பீட்டிற்காக பல்கலைக்கழகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், மேற்படி நிபுணர்கள் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்ட ஆராய்ச்சிக்கு அனுமதி வழங்கப்பட்டது.

➢ **உரம் மற்றும் மண் பராமரிப்பினை விருத்திசெய்வதன் மூலம் தரமற்ற மண்ணை மேம்படுத்துதல்**

"பசளை மற்றும் மண் பேணுகையினை விருத்தி செய்வதனூடாக தரம் குறைந்த மண்ணை மேம்படுத்தல்" தொடர்பான செயற்றிட்டம் நிறைவடைந்ததன் பின்னர், பயிர் விளைச்சலுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் உள்ளூரில் மூலப்பொருட்களிலிருந்து நெல் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளை சூழலுக்கு உகந்ததாக மாற்றுவதற்கான புதிய கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. புதிய கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர், உயிரி மென்சவ்வு அடிப்படையிலான 100% உயிர்-கரிம-கனிய (BOM) உர நடைமுறையின் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக 2023 ஆம் ஆண்டில் வெலிகந்த மற்றும் தெஹியத்தகண்டிய ஆகிய இடங்களில் சிறிய நிலங்களில் (20 m^2) இரண்டு கள சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன. வயல் மனைகள் தயாரிக்கப்பட்டு, மூன்று (BOM) சிகிச்சைகள் மனைகளுக்கு பயன்படுத்தப்பட்டன. 2023 ஆம் ஆண்டில், வணிக நிகழ்ச்சித்திட்டத்தின் போது, குருநாகல், கிளிநொச்சி, வவுனியா, முலத்தீவு, மட்டக்களப்பு மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் சுமார் 20% தானிய விளைச்சல் அதிகரிப்புடன், BFBF மற்றும் இரசாயன உரங்களின் குறைக்கப்பட்ட அளவுகள் NPK உடன் சுமார் 25,000 ஏக்கர் நெல்லை வெற்றிகரமாக பயிரிடப்பட்டது. BFBF நடைமுறையுடன் மண் கார்பன் வரிசைப்படுத்தல் கணிசமாக அதிகரிக்கிறது என்பதும் கவனிக்கப்பட்டது, இது கார்பன் வர்த்தகத்தில் தாக்கங்களைக் கொண்டுள்ளது. இரசாயன உரங்களுக்கு மட்டுமே உர மானியம் வழங்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கை மாற்றத்தின் காரணமாக 2023 ஆம் ஆண்டில் நெல் சாகுபடிக்கு BFBF விநியோகம் குறைவாக இருந்தது. 2023 ஆம் ஆண்டில் 6,070 ஏக்கர் சோயாபீன், பாசிப்பயறு, காய்கறி மொச்சை மற்றும் நிலக்கடலை சாகுபடிக்கு ரைசோபியம் உயிர் உரம் விநியோகிக்கப்பட்டது

➢ **சூரிய மின்தகடுகள் முன்மாதிரி தயாரிப்புத் திட்டம்**

"சூரியத் தகடுகளின் முன்மாதிரி உற்பத்தி தொடர்பான கல்விப் பயிற்சி கருத்திட்டம்" அமைச்சரவை அமைச்சர்களின் அங்கீகாரத்துடன் 2017 ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்பட்டது. களனி பல்கலைக்கழகத்தின் கருத்திட்ட அலுவலகத்தின் ஊடாக அமைச்சு இந்த கருத்திட்டத்தை நிருவகிக்கின்றது. இது யாழ்ப்பாணம், களனி மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆரம்ப கருத்திட்ட காலப்பகுதி 2017 முதல் 2021 வரை இருந்திருந்துடன், பின்னர் பொதுத் திறைசேரியின் தேசிய திட்டமிடல் பிரிவின் (NPD)அங்கீகாரத்துடன் 2023 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டிருந்தது.

சூரிய சக்தியை மாற்று புதுப்பிக்கத்தக்க மின்சார வளமாக பயன்படுத்துவது தொடர்பாக வடக்கு, கிழக்கு உள்ளடங்கலாக வெவ்வேறு மாவட்டங்களிலுள்ள 48 பாடசாலைகளில் 3277 மாணவர்களை உள்ளடக்கிய 36 பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. 2019/2020 காலப்பகுதியில் அமைச்சு மற்றும் பல்கலைக்கழகங்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று தேசிய கண்காட்சிகளில் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டபோது எண்ணற்ற பாடசாலை மாணவர்கள் பயனடைந்திருந்தனர். 38 சா/த மற்றும் உ/த பாடசாலை ஆசிரியர்களுக்கு ஆசிரியர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடத்தப்பட்டது.

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA) மற்றும் இலங்கை நிலைபெறுதகு மின்வலு அதிகாரசபை (SLSEA) ஆகியவற்றுடன் இணைந்து நாட்டில் முதன் முறையாக தேசிய தொழில் தகைமை (NVQ) நிலை 3 மற்றும் 4 சூரியசக்தி தொழில்நுட்பவியலாளர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதில் கருத்திட்ட அணி முக்கிய பங்காற்றியிருந்தது. இந்த வகைக்கான பாடவிதானம்; மற்றும் பயிற்சித் திட்டம் NAITA இல்லாததால் திட்டக் குழு இந்த பாடவிதானத்திற்கான முழு பாடவிதானத்தையும் உருவாக்கியிருந்தது. 5 மாத கோட்பாடு, 12 மாத பணியில் இருக்கும் போதான பயிற்சி (OJT) மற்றும் 1 மாத உயர் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கின்ற இந்த நிகழ்ச்சித்திட்டம் அம்பாந்தோட்டை சூரியசக்தி

பூங்காவில் நடைபெறுகின்றது. அத்துடன்;, தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) நிலை 4 சூரிய தொழில்நுட்பவியலாளர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட NAITA பணியாளர்களுக்கு பயிற்சியாளர்களுக்கான பயிற்சி (ToT) நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. 107 (ஆரம்பத்தில் பதிவுசெய்யப்பட்ட 158) மாணவர்களின் 1 ஆவது தொகுதி சூரிய தொழில்நுட்பவியலாளர்கள் குறித்த தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) நிலை 4 பாடநெறியின் பயிற்சி பகுதியை 2021 மே மாதத்தில்; நிறைவு செய்திருந்தது. NAITA மற்றும் SLSEA ஆகியவற்றுடன் இணைந்து இந்த பயிற்சி திட்டம் செயற்படுத்தப்பட்டது. இலங்கை கட்டளையகத்தின் ஒத்துழைப்புடன் 84 தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) பயிலுநர்கள் அம்பாந்தோட்டை சூரியசக்தி பூங்காவில் நவீன பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை (செய்முறை அமர்வு) பூர்த்தி செய்துள்ளனர்.

இது ஒரு புதிய திட்டம் என்பதால் விண்ணப்பதாரிகளின் தகுதியை மதிப்பிடுவதற்கு தேவையான மதிப்பீட்டாளர்கள் நாட்டில் காணப்படவில்லை. ஆகையால், இக்கருத்திட்டமானது மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுடன் (TVEC) இணைந்து செயற்பட்டதுடன், தேசிய தொழிற்கல்வி தகைமை (Nஏஞ) நிலை 3 மற்றும் 4 சூரிய தொழில்நுட்பவியலாளர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பீடுகளை மதிப்பிடுவதற்கு 4 மதிப்பீட்டாளர்களுக்கு பயிற்சியளித்திருந்தது.அடுத்த பயிற்சிக்காக மேலும் 8 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுக்கு (வுஏநுஊ) அனுப்பப்பட்டன. அம்பாந்தோட்டை சூரியசக்தி பூங்காவில் நடத்தப்பட்ட இறுதி மதிப்பீடுகளின்படி, 35 பரீட்சார்த்திகள் தேசிய தொழிற்கல்வி தகைமை (NIA) நிலை 4 தகைமைகளுடன் பட்டம் பெற்றிருந்ததுடன், அவர்களில் 30 பேர் தேசிய தொழிற்கல்வி தகைமை (NIA) நிலை 3 தகைமைகளுடன் பட்டம் பெற்றிருந்தனர். இந்த பட்டதாரிகளுக்கான உத்தியோகபூர்வ பட்டமளிப்பு விழா 2022 ஆகஸ்ட் 22 ஆம் திகதி கல்வி அமைச்சர் கௌரவ கலாநிதி சுசில் பிரேமஜயந்த அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) நிலை 4 சூரிய தொழில்நுட்பவியலாளர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான 2 ஆவது தொகுதி மாணவர்கள் 136 பேருக்கு 9 NAITA நிலையங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

- **ஆராய்ச்சி உதவியாளர்கள் (பங்குபற்றுகின்ற பல்கலைக் கழகங்களில் முழு நேர ஆராய்ச்சிப் பயிற்சி)**
  - யாழ்ப்பாணம்- 1 (MPhil – நிறைவுசெய்யப்படவுள்ளது)
  - களனி - 2 (1 PhD - நிறைவுசெய்யப்படவுள்ளது மற்றும் 1 MPhil – நிறைவு செய்யப்பட்டுள்ளது)
  - பேராதனை - 2 (1 PhD மற்றும் 1 MPhil - நிறைவுசெய்யப்படவுள்ளது)

